செ.வெ.எண்:22/ஜூன் நாள்:11.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் இன்று (11.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைகளின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கங்கைகொண்டான் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.9.78 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊரணி மேம்பாட்டுப் பணிகளையும், பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள பசுமை வீட்டினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன்பின்பு, பாண்டியூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி சேவை மையம் கட்டிட கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை துரிதமாக மேற்கொண்டு ஊராட்சி சேவை மைய கட்டிடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கொண்டுவர வேண்டுமென சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அ.காச்சான் கிராமத்தில் ரூ.6.70 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் நியாயவிலைக் கடை கட்டிடத்திற்கான கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து, அதன்பின்பு தமிழ்நாடு கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.30.65 இலட்சம் மதிப்பில் அ.காச்சான் கிராமம் வழியாக அமைக்கப்பட்டுள்ள நயினார்கோவில் -தேவிப்பட்டிணம் சாலை வரையிலான தார்சாலையின் தரத்தினை ஆய்வு செய்தார். மேலும் அ.காச்சான் கிராமத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளும்போது கிராமத்தின் சுற்றுப்புறத்தினை மேம்படுத்தி சுகாதாரமான கிராமமாக வளர்ச்சிப் பெற உறுதுணையாக விளங்கும் என துப்புரவு பணியாளர்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன்பின்பு, நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காடரந்தக்குடி கிராமத்தில் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டு வரும் பசுமை வீடுகளின் கட்டுமானப் பணிகளையும், இராதாப்புளி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி சேவை மையம் கட்டிட கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, கீழகாவனூர் கிராமத்தில் தமிழ்நாடு கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.17.23 இலட்சம் மதிப்பில் கீழகாவனூர் வழியாக உப்பூர் - கோட்டையூர் வரையிலான தார்சாலையின் தரத்தினை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, நயினார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எஸ்.அப்துல் ஜபார், ஊரக வளர்ச்சி உதவிப் பொறியாளர்கள் திரு.பூப்பாண்டி, திரு.லிவிங்ஸ்டன், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எஸ்.இளங்கோவன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**